| Headline | MOH plans to reduce HIV cases before Dec 2015 | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 02 Dec 2014 | Color | Black/white |
| Section | News | Circulation | 35,000 |
| Page No | 3 | Readership | 125,000 |
| Language | Tamil | ArticleSize | 265 cm² |
| Journalist | NULL | AdValue | RM 642 |
| Frequency | Daily | PR Value | RM 1,927 |



# அடுத்த ஆண்டு இறுதிக்குள் எச்.ஐ.வி. நோயின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும்!

## -டத்தோஸ்ரீ டாக்டர் சுப்ரமணியம்

**கோலாலம்பூர், டிச.2-**

அடுத்த ஆண்டு இறுதிக்குள் இந்நாட்டில் அதிகரித்து வரும் எச்.ஐ.வி. நோயின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் எஸ்.சுப்ரமணியம் தெரிவித்தார்.

கடந்த 2000ஆம் ஆண்டில் 1 லட்சம் பேருக்கு 21.7 விழுக்காடு எண்ணிக்கையில் இருந்த எச்.ஐ.வி. நோயாளிகளின் எண்ணிக்கையிலிருந்து அடுத்த ஆண்டு இறுதிக்குள் 1 லட்சம் பேருக்கு 11ஆக குறைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இவ்வருடம் ஜனவரி முதல் செப்டம்பர் வரை சுமார் 2,252 எச்.ஐ.வி நோயினால் பாதிக்கப்பட்டனர். அவ்வெண்ணிக்கை இவ்வருட இறுதிக்குள் 3,367ஆக உயர்ந்துள்ளது என பெர்னாமா செய்தியில் அவர் கூறினார்.

இந்த எண்ணிக்கை 2022ஆம் ஆண்டை காட்டிலும் சற்று குறைந்துள்ளது. 2002ஆம் ஆண்டில் எச்.ஐ.வி நோயினால் 1 லட்சம் பேரில் 28.5 விழுக்காடு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று 2014ஆம் ஆண்டின் உலக தேசிய ஏய்ட்ஸ் தினத்தை அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைத்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கடந்த செப்டம்பர் மாதம் வரை மொத்தம் 104,197 பேர் எச்.ஐ.வி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில், 21,111 ஏய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட வேளையில் 16,918 பேர் உயிரிழந்துள்ளனர். எச்.ஐ.வி. நோயினால் பாதிக்கப்பட்டு இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் 87,279 பேர்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நோயினை தடுப்பதற்கு பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தேவையான சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆலோசனை சேவை முதலானவை சரிசமமாக வழங்கப் படுவதோடு மலேசிய கலாசார மற்றும் பண்பாட்டு அடிப்படையில் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் இந்நோயை கட்டுப்படுத்தும் முயற்சிகளும் தொடரப்படுவதை அரசாங்கம் கண்காணிக்கும் என அவர் மேலும் சொன்னார்.

"இந்நோயின் ஆரம்பக் கட்டத்தை கண்டறிந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அதற்கான தொடக்க கட்ட சிகிச்சையை வழங்குவது உள்பட பல்வேறு பிரிவுகளில் இந்நோய்க்கான சிகிச்சையை விரிவு படுத்தியுள்ளோம்."

மேலும், எச்.ஐ.வி நோயில் பாதிக்கப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளும் அந்நோயினால் பாதிக்கப்படாமல் இருக்க முதல் 2 ஆண்டு காலத்திற்கு அக்குழந்தை களுக்கு இலவச பால் உணவு திட்டம் வழங்கப்படும் என்றார்.

Powered by: iSENTIA